**தலைப்பு 176 – துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல்கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 யூன் 15 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 15 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத ்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான என்னால் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 செலவீன முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 08 செலவீன விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 63,077,100 தொகையான மொத்தத் தேறிய ஏற்பாடு மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 21/1596/304/134 ஆம் இலக்க அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் கொவிட்- 19 காரணமாக நிறுவனத்தின் இடங்களை பகுதயியாக்காமை, பொருளாதார சிக்கலால் செலவீனங்கள் வரையறுக்கப்பட்டமை, மீளாய்வாண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட செலவீனங்கள் ஏற்படாமை மற்றும் பாதீட்டை விஞ்சி ஒப்பந்தகாரரால் மொத்த வேலை மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும் கொடுப்பனவு சான்றிதழ்களை விநியோகிக்கும் போது அனுமதியைப் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டமையால் எதிர்பார்க்கப்பட்ட செலவீனம் மீளாய்வாண்டின் போது ஏற்படாமை போன்ற காரணங்களால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டமை இத்தகைய சேமிப்புக்களிற்கு காரணமாகவிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய முறையில் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மேலதிக மதிப்பீடுகள் மற்றும் ஏற்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் பயன்படுத்தப்பட்டிருக்காத போது ரூபா 1,332,748 மொத்தத்தொகையான ஒதுக்கீடுகள் 06 சந்தர்ப்பங்களில் சேமிக்கபட்டிருந்தது. ஏற்பாடுகளின் சதவீதமாக தொகை | செயற்பாட்டுக் குத்தகையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களிற்கான குத்தகைக்காலம் செப்தெம்பரில் முடிவடைந்திருந்ததுடன் சாதகமற்ற பொருளாதார நிலமையால் குத்தகைக்காலம் நீடிக்கப்பட்டிருக்காமை மற்றும் மீளாய்வாண்டின் போது பாதீட்டிலிருந்து ஒதுக்கப்பட்ட செலவீனங்கள் போதியவில் இருக்காமையால் ஆண்டின் ஒதுக்கப்பட்ட செலவீனங்கள் எதிர்பார்க்கப்பட்டவாறு ஏற்படாமையால் ஆண்டில் வரவிருக்கும் காலப்பகுதியில் செலவீனங்கள் ஏற்படும் என்ற எதிர்பார்ப்பில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதும் செலவீனங்கள் ஏற்படாமை நிதிப் பிரமாணம் 66 | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | சேமிக்கப்பட்டமையால் மாற்றப்பட்டவை 26 சதவீதத்திலிருந்து 252 சதவீத வீச்சிலிருந்தது. | இன் கீழ் மாற்றப்பட்ட ரூபா 1,332,748 தொகையான மேலதிக மதிப்பீடுகள் மற்றும் ஏற்பாடுகளில் ஏற்பட்ட சேமிப்புக்களிற்கு காரணமாக அமைந்தன. | |
| (இ) | 2021 ஆம் ஆண்டிற்கான தேறிய ஏற்பாட்டில் 22 சதவீதத்திலிருந்து 94 சதவீத வீச்சிலுள்ள 9 மூலதன செலவீன விடயங்களிலிருந்து சேமிக்கப்பட்ட ரூபா 139,510,966 தொகை மற்றும் 23 சதவீதத்திலிருந்து 99 சதவீத வீச்சிலுள்ள 12 மீண்டுவரும் செலவீன விடயங்களிலிருந்து சேமிக்கப்பட்ட ரூபா 9,277,013 தொகை போன்றவற்றை உள்ளடக்கிய ரூபா 148,787,979 மொத்தத்தொகை சேமிக்கப்பட்டது. | 2021 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 21/1596/304/134 ஆம் இலக்க அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் கொவிட்- 19 காரணமாக நிறுவனத்தின் இடங்களை பிரிக்காமை, மீளாய்வாண்டிற்கான செலவீனம் எதிர்பார்க்கப்பட்டதை விட குறைவாகவிருந்தமை, பொருளாதாரச்சிக்கலால் ஏற்பட்ட செலவீன வரையறையால் பாதீட்டை விஞ்சி ஒப்பந்தகாரரால் மொத்த வேலை மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும் கொடுப்பனவு சான்றிதழ்களை விநியோகிக்கும் போது அனுமதியைப் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டமையால் முழு வேலைக்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்படாமை மற்றும் கொவிட் - 19 காரணமாக செயற்திட்டத்தின் வேலைகள் 2 மாதங்களால் காலதாமதம் ஏற்பட்டமை போன்றன 2021 ஆம் ஆண்டிற்கான தேறிய ஏற்பாட்டிலிருந்து 09 செலவீன விடயங்களில் ஏற்பட்ட ரூபா 139,510,966 தொகையான சேமிப்பிற்கு காரணமாகவிருந்தது.<br><br>2021 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 21/1596/304/134 ஆம் இலக்க அமைச்சரவையின் தீர்மானத்தின் ஏற்பாடு சேமிக்கப்பட்டமை மீளாய்வாண்டிற்கான தேறிய ஏற்பாட்டில் மீண்டுவரும் செலவீனங்களில் ஏற்பட்ட சேமிக்கான காரணமாகவிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது பாதீட்டிலிருந்து ஒதுக்கப்பட்ட செலவீனங்கள் போதியவில் இருக்காமையால் ஆண்டின் ஒதுக்கப்பட்ட செலவீனங்கள் எதிர்பார்க்கப்பட்டவாறு ஏற்படாமையால் மேலதிக ஏற்பாட்டிற்கான சேமிப்பிற்கான காரணமாகவிருந்தது. அதற்கு மேலதிகமாக, 2021 ஆம் ஆண்டிற்காக அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டில் 2021.08.31 ஆந் திகதிய 21/1596/304/134 ஆம் இலக்க அமைச்சரவைத்தீர்மானத்தின் பிரகாரம் ஏற்பாட்டின் மொத்த சேமிப்பு ரூபா 30.35 மில்லியனாகவிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய முறையில் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.2. கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை ஏற்படுத்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்வுப் பரீட்சிப்பின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்கான ரூபா 377,810 தொகையான பொறுப்புக்கள் 2022 சனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் தீர்க்கப்பட்டிருந்ததுடன் இந்தச் செலவீனங்கள் 2021 ஆம் ஆண்டிற்கான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் பொறுப்புக்களாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | அத்தகைய பொறுப்புக்களிற்கான பற்றுச்சீட்டுக்கள் 2021.12.31 அளவிலும் கொடுப்பனவுகளிற்காக கணக்கீட்டுப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் மேற்கூறப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் 2021 ஆம் ஆண்டிற்கான பொறுப்புப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அத்தகைய பற்றுச்சீட்டுக்கள் 2022 ஆம் ஆண்டில் கொடுப்பனவுகளிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், 2021 ஆம் ஆண்டிற்காகன பொறுப்புக்கள் பதிவேட்டில் பொறுப்புக்களாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. 2021 ஆம் ஆண்டு தொடர்பில் 2021 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் 2021.12.31 இல் செலுத்தப்பட்டது. | நிதிப்பிரமாணம் 94 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட ஏற்பாடு இல்லாமல் பொறுப்புக்கள் மேற்கொள்ளப்படமாட்டாது. |
| (ஆ) | இரண்டு செயற்திட்டங்கள் தொடர்பில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 செலவீனவிடயங்களில் ஏற்படுத்தப்பட்ட சேமிப்புக்களை விஞ்சி ரூபா 372,469 தொகை பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தது. | - மேற்படி- | - மேற்படி- |

## 2.3 அரச உத்தியோகத்தர்கள் முற்பணக் கணக்கு

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சிலிருந்து இடமாற்றம் பெற்று வெளிநிறுவனங்களுக்குச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட | இடமாற்றத்திகதி குறிப்பாக குறிப்பிடப்படாத 2 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 119,200 கடன் மீதி 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து பழமைவாய்ந்ததாகவிருந்தது. இக் கடன் மீதியை பதிவழிப்பதற்கு பொது நிதி | நிலுவை கடன் மீதியை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய கடன் மீதி ரூபா 119,200 ஆக காணப்பட்டது. இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 02 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த இந்த மீதி 16 வருடங்களுக்கு மேலாக அறவிடப்படாமல் முன்கொண்டுவரப்பட்டது. | திணைக்களத்திற்கு கோரிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் சிபாரிசுகளின் பிரகாரம் அக்கடன் மீதியை பதிவழிப்புச் செய்வதற்கு குழுவான்று நியமிக்கப்பட்டதுடன் அந்தக்குழுவானது விடயங்களை கற்ற பின்னர் 2019.10.18 இல் அதனுடைய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. | |
| **(ஆ)** | இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தரொருவரிடமிருந்து நீண்டகாலமாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 293,470 இற்கான கடன் தொகை 2021 ஆம் ஆண்டின் இறுதி அளவிலும் அறவீடு செய்ய முடியாமல் இருந்தது. | இடைநிறுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர் திரு.ஜே.ஏ.அறியசேனாக்கு எதிராக இலஞ்ச ஊழல் புலனாய்வு ஆணைக்குழுவினால் உயர் நீதிமன்றத்தில் தாக்குதல் செய்திருந்த வழக்கின் தீர்ப்பிற்காக அந்த உத்தியோகத்தர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு 2022.03.08 இல் முடிவாக்கப்பட்டு அவர் தப்புச்செய்தவராக அறிவிக்கப்பட்டதுடன் அவரிடமிருந்து அறவிடப்படவேண்டியிருந்த கடன்மீதி ரூபா 293,470 ஆக இருந்தது. | நிலுவை கடன் மீதியை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்படுகின்றதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தவேண்டியிருந்துடன் அம் முறைமையின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன்படி முறைமை பயன்தரு விதமாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதெனவும், அம் மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான எழுத்துமூலங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) | 1971 இன் 52 ஆம் இலக்க வணிக கப்பற்துறைச் சட்டம் | 1971 இன் 52 ஆம் இலக்க வணிக கப்பற்துறைச் சட்டத்தின் கீழ் வணிக கப்பற்துறை செயலகக் கட்டணங்கள் மற்றும் அத்தகைய சேவைகளுக்கான கட்டணங்கள் 2016 நவம்பர் 14 ஆந் திகதிய வர்த்தமானிக்கிணங்க டொலர்களில் அறவிடப்பட வேண்டிய போதும் அத்தகைய கட்டணங்கள் ரூபாயில் அறவிடப்பட்டது அவதானிக்கப்பட்டது. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்ட சேவைக்காக உழைக்கப்பட்ட வருமானம் முறையே ரூபா 18,117,849 மற்றும் ரூபா 16,574,013 ஆகவிருந்தது. டொலரில் அறவிடப்படாததற்கான காரணம் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | டொலரில் கட்டணங்களை அறிவிடுவதற்கான டொலர் கணக்கை ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, டொலர் கணக்கை திறப்பதற்கான விண்ணப்பம் மற்றும் ஆவணங்கள் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் அனுமதியைப் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2016 நவம்பர் 14 ஆந் திகதிய வர்த்தமானி மற்றும் 1971 இன் 52 ஆம் இலக்க வணிக கப்பற்துறைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 சனவரி 17 திகதிய 01/2018 இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கை | அமைச்சால் வழங்கப்பட்ட சேவைகளுக்காக அறவிடப்பட்ட 10 வகைப்படுத்தலின் கீழுள்ள உப – கட்டணங்களின் 54 வகைகளிற்கு மேலானவை 15 வருடங்களிற்கு மேலாக திருத்தப்பட்டிருக்கவில்லை. 2018 சனவரி 17 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க பொது நிதிக்சுற்றறிக்கையால் வழங்கப்பட்ட சேவைகளுக்காக அறவிடப்பட்ட கட்டணங்களை 15 சதவீதமாக திருத்துவதற்கு அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டது. 16 வகைப்படுத்தலுக்குரிய கட்டண சீராக்கலிற்கான வரைபுகள் அனுமதியினைப் பெறுவதற்காக நிதி அமைச்சிற்கு | சேவைகளை வழங்குவதற்காக அறவிடப்பட்ட கட்டணங்களின் சீரமைக்கப்பட்ட வரைபு சமர்ப்பிக்கப்பட்டு பொது நிதித் திணைக்களத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2018 சனவரி 17 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான அனுமதியானது 2022 ஏப்ரல் 22 இலும் பெறப்பட்டிருக்கவில்லை. தொடர்ச்சியான விடுதலைப் சான்றிதழ்கள், தொழில்தகைமை விநியோகங்கள் போன்றவற்றிற்காக அறவிடப்பட்ட கட்டணங்கள் மற்றும் கட்டுநிதித்தாள்களை நாளதுவரையாக்குவதற்காக அறவிடப்பட்ட கட்டணங்கள் 2017 பெப்ரவரி 01 இலிருந்து அமுலுக்குவரும் வகையில் சீரமைக்க வேண்டியிருந்தபோதிலும் அத்தகைய சீரமைப்புக்கள் 2022 ஏப்ரல் 30 வரையிலும் வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

-------------------------

**3.1. வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்**

----------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ----------------------- | ------------------------ | ------------------- |
| (அ) | ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவியின் கீழ் கொழும்பு வடக்கு துறைமுக அபிவிருத்தியின் சாத்தியவள கற்கைக்காக 2021 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட மதிப்பிடப்பட்ட ஒதுக்கீடு ரூபா 380,000,000 ஆகவிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவீனம் ரூபா 286,943,711 ஆகவிருந்தது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் இந்தச் செயற்திட்டத்துடன் தொடர்புடைய ஆலோசனை சேவைகள் மற்றும் பொறியியல் சேவைகள் 2020 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டளவில் பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்ட போதும் பெறுகைச் செய்முறையில் ஏற்பட்ட காலதாமதத்தால் உரிய ஒப்பந்தத்தை வழங்குவது 2020 பெப்ரவரி 24 வரையிலும் தாமதமடைந்திருந்தது. ஒப்பந்தப் பெறுமதியானது ஜீபீபி 0.85 மில்லியனாகவும், 2.03 மில்லியன் டொலர்களாகவும் மற்றும் 66.17 மில்லியன் ரூபாவாகவும் இருந்தது. | 176-2-4-25-2506 கொழும்பு வடக்கு அபிவிருத்தி செயற்திட்டத்தின் சாத்தியவளக் கற்கைக்காக திட்டமிடப்பட்டவாறு 2021 ஆம் ஆண்டினுள் செயற்திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2021 செப்தெம்பர் இலிருந்து 2021 திசெம்பர் வரைக்குரிய கொடுப்பனவு பற்றுச்சீட்டுக்கள் உரிய ஆலோசனை குழுவால் (ஏஈசீஓஎம்) துறைமுக அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், ஆலோசனை சேவைகளுக்காக செலுத்தவேண்டிய தொகை கொடுப்பனவு பற்றுச்சீட்டிலுள்ள கூட்டுத்தொகை வழுக்களால் தவறாக பதிவிடப்பட்டிருந்தது. நிறுவனம் இந்தப் பிரச்சனை தொடர்பில் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் மேலதிக வழு மீள திருத்தப்பட்டு குழுத்தலைவரின் உறுதிப்படுத்தலுடன் 2022 பெப்ரவரியில் கொடுப்பனவிற்காக | திட்டங்களை வடிவமைத்த பின்னர் செயற்திட்டத்தினை அமுல்படுத்தலிற்காக வேண்டப்பட்ட தீர்ப்பனவுகள் மற்றும் இணக்கங்களுடன் தொடர்பாக ஆரம்ப பரீசிலனை மேற்கொள்ளப்பட வேண்டும். |

ஒப்பந்தமானது 15 மாதங்களில் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டதுடன் ஆலோசனை சேவைகளுக்கான பௌதீக செயன்முறை 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் 75% ஆகவிருந்தது.

துறைமுக அதிகாரசபைக்கு மீளசமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆகையால், 2021 செப்தெம்பரிலிருந்து 2021 திசெம்பர் வரைக்கும் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்ட நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவு 2022 பெப்ரவரியில் தொடங்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட காரணிகளின் பிரகாரம் திட்டமிடப்பட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டில் உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் எதுவுமிருக்கவில்லை.

(ஆ) ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் அமுல்படுத்தப்பட்ட கோபுரங்கள் தொடர்பாக கட்டியெழுப்பப்பட்ட துறைமுக நுழைவு உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்கான மதிப்பிடப்பட்ட ஏற்பாடு ரூபா 210 மில்லியனாகவிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான செலவீனம் ரூபா 107.5 மில்லியனாகவிருந்தது. உரிய துறைமுக நுழைவு உயர்ந்த நெடுஞ்சாலையின் நிர்மாணத்திற்காக அகற்றப்பட்ட அதிகாரசபைக்குச் சொந்தமான பயிற்சிப்பட்டறையின் மீள்நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் 2021 ஆகஸ்ட் 06 இல் பீஎல்-டீஜீஎஸ்ஜேவீக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதற்குமேலதிகமாக, உரிய வேலைகள் 2021 செப்தெம்பர் 09 இல் தொடங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தப்பெறுமதி ரூபா 1,090 மில்லியனாகவிருந்ததுடன் ஒப்பந்தக்காலப்பகுதி 09 மாதங்களாகவிருந்தது. செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் துறைமுக நுழைவு உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலைகள் செயற்திட்டத்தின் பௌதீக செயன்முன்னேற்றம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 12% ஆகவிருந்தது.

இந்தச் செயற்திட்டமானது 09 மாதங்களிற்குள் பூர்த்திசெய்யப்படக்கூடிய செயற்திட்டமாக திட்டமிடப்பட்டது. செயற்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் இது பெறுகைச்செய்முறையின் போது மீள்மதிப்பிடப்பட வேண்டியிருந்தமையால் முறையான அனுமதியைப் பெறுவது தாமதமடைந்திருந்தது. எனினும், ஆகஸ்ட் இல் உரிய ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட ஆரம்பித்தலிற்கான கட்டளை 2021 செப்தெம்பர் இல் வழங்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட வேண்டியிருந்த வேலையினை கருத்திற்கொள்ளும் போது மீதமாகவுள்ள 3 மாதத்திற்கான ஆரம்ப முற்பணம் (ஒப்பந்த பெறுமதியின் 10%) ரூபா 107 மில்லியனாக மாத்திரமுள்ளது. செயற்திட்ட காலப்பகுதியானது 2022 யூலை இல் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டமையால் மீதமாகவுள்ள கொடுப்பனவுகள் 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளக்கூடும்.

திட்டங்களை வடிவமைத்த பின்னர் செயற்திட்டத்தினை அமுல்படுத்தலிற்காக வேண்டப்பட்ட தீர்ப்பனவுகள் மற்றும் இணக்கங்களுடன் தொடர்பாக ஆரம்ப பரீசிலனை மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சிற்குச் சொந்தமான ரூபா 10,500,000 பெறுமதியான மோட்டார் வாகனமொன்று நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருக்காததுடன் தென் அபிவிருத்தி அமைச்சுக்கு சொந்தமான ரூபா 6,000,000 பெறுமதியான மோட்டார் வாகனமொன்று நிதியல்லாத சொத்துக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது. இதனால், நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட நிதியல்லாச்சொத்துக்கள் ரூபா 4,500,000 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | கேஎஸ் 2992 ஆம் இலக்கத்தைக் கொண்ட ரூபா 10,500,000 பெறுமதியான மோட்டார் வாகனத்தை நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்பதுடன் வழுவானது திருத்தப்படும். | முறையான செய்முறையின் பிரகாரம் சொத்துக்கள் உரித்தாக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டியதுடன் சொத்துப் பதிவேடுகள் சரியாக பேணப்பட வேண்டும். |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு அமைச்சிலுள்ள 03 சிரேஸ்ட மட்ட வெற்றிடங்களை உள்ளடக்கி 17 சிரேஸ்ட மட்ட வெற்றிடங்களும் கடற்படை செயலகத்தின் பொறியியல் பிரிவுகளுக்குச் சொந்தமான கடற்படை உத்தியோகத்தர்களினது 06 வெற்றிடங்களுமிருந்தது. அதற்குமேலதிகமாக, அமைச்சின் நாளாந்த தொழிற்பாட்டில் செல்வாக்குச்செலுத்ததுகின்ற மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலையில் 14 உத்தியோகத்தர் வெற்றிடங்களும் கடற்படை | அமைச்சின் நவடிக்கைகளை சுமூகமான முறையில் மேற்கொள்வதற்காக வெற்றிடற்களிற்காக உத்தியோகத்தர்களை வழங்குவதற்கு பொதுச்சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு கடிதம் வழங்கி அறிவிப்பதன் மூலம் 03 சிரேஸ்ட நிலை வெற்றிடங்கள் , 07 மூன்றாந்தர, இரண்டாந்தர மற்றும் முதலாம்தர வெற்றிடங்கள் வரையிலும் குறைப்பதற்கு இயலுமாகவிருந்தது. தற்போதுள்ள வெற்றிடங்களானது அமைச்சின் தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளை வழங்குவதற்கு தடையாகவுள்ளது என நான அறியத் தருகின்றேன்.<br><br>ஒப்பந்த அடிப்படையில் பொருத்தமாக கடற்படை உத்தியோகத்தரை வேலைக்கமர்த்துவதற்காக விநியோகிக்கப்பட்ட 2014.02.21 ஆந் திகதிய சீபி/13/0709/505/029 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தால் தேவையான அனுமதியை வழங்கியதைத் தொடர்ந்து வணிக கப்பற்துறை செயலகத்திலுள்ள கடற்படை உத்தியோகத்தர் பதவிகளுக்கான அலுவலர்களை வேலைக்கமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட அதேநேரம் உத்தியோகத்தர்களை நிரந்தர அடிப்படையில் வேலைக்கமர்த்துவதற்கு | அமைச்சின் தொழிற்பாடுகளையும் கடமைகளையும் மேற்கொள்வதற்கு போதிய உத்தியோகத்தரை பராமரிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| செயலகத்தில் அனைத்து நிலையிலும் 50 வெற்றிடங்களுமிருந்தது. | இயலாமலிருந்தது.<br><br>எனினும், கடற்படை உத்தியோகத்தரை கடந்த வருடத்தில் வேலைக்கமர்த்துவதற்கு அனுமதியைப் பெறுவதற்கு இயலாதிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டிலிருந்து நிரந்தர அடிப்படையில் உத்தியோகத்தரை வேலைக்கமர்த்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் வர்த்தமானியில் விண்ணப்பங்களை கோரி வெளியிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் உரிய சேர்ப்பனவுகள் 2022.04.26 இல் விநியோகிக்கப்பட்ட 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் VII ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் தற்காலிகமாக நிறுத்தக்கட்டிருந்தது. எனினும், உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டவுடன் எதிர்காலத்தில் ஆட்சேர்த்தல் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படும். வணிகத்துறை கடற்படை செயலகத்திலுள்ள முதலாந்தர, இரண்டாந்தர மற்றும் முதலாந்தர நிலைகளில் 50 பதவிகள் வெற்றிடமாகவிருந்தது என குறிப்பிடப்பட்டதுடன் இணைந்த சேவையின் பணிப்பாளர் நாயகம் வெற்றிடங்கள் காணப்படும் போதும் அதற்குப் பின்னரும் அத்தகைய பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை வேலைன்னமர்த்துவதற்கு அறிவிக்கப்பட்டிருந்தார். ஆதற்கு மேலதிகமாக, 06 பயிற்சி பட்டதாரிகளையும் முதலாந்தர மட்டத்தில் 06 உத்தியோகத்தர்களையும் தொழில்நுட்ப கல்லூரிகளில் அவர்களுடைய பயிற்சியினைப் பூர்த்திசெய்த மாணவர்களையும் 06 மாதங்கள் பயிற்சிக்காக 2021.12.31 அளவில் அலுவலகத்திற்கு இணைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |